## கடற்கரை கவியரங்கு எண் – 612 நாள் 03-04-2022

# காலத்தை வெல்வோம்!

காலம் எழுதும் மாயப் பதிவாய்,
சிந்தை நம்மிடம் உட்கார்ந்து பேசும்!
கோலம் கொள்ளும் காட்சிகள் மனத்தில்
கொள்ளை இன்பம் பூத்திடச் செய்யும்!
சீலம் என்பதும் மனத்தின் செறிவே!
சிந்தை யூட்டும் காலத்தின் வடிவே!
பாலம் அமைத்து மனத்தை நாமே
பக்குவம் செய்து, வெற்றியை அடைவோம்!

மூலம் தேடும் முகவரி நினைவில்,
மூழ்கிய மாந்தரும் தெளிவு கண்டனர்!
ஆலம் விழுதின் கரங்கள் கோத்து,
ஆடியே மகிழ்ந்து வாழ்வை நகர்த்தி,
கோலம் கலைக்கும் குழவியின் நினைவில்,
கொத்தாய் மனத்துள் மகிழ்ந்து நிறைந்து,
காலம் சூட்டும் கற்பனைப் பொதியை,
கனிவாய் சுமந்து மகிழ்ந்து போவோம்!

ஆளும் மனத்தில் ஆளுகை தேடாமல்,
அன்பின் திறப்பை அணியாய் செய்து,
மூளும் அறிவை முகவரி யாக்கி,
மண்பதை காத்து மகிழ்வுடன் வாழ்வோம்!
தேளின் குணமே கொட்டுதல் ஆகும்!
தெளிவு கொண்டு வாழ்வை நகர்த்த,
வாளைத் தேடாமல் பகையை வெல்லும்,
வாய்ப்பை நாமும் தேடிக் கொள்வோம்!

கூறிய வகையில் அறிவையும் செய்து,
கொள்ளும் வகையாய் உண்மையை விளக்கி,
மாறிடும் உலகியல் உண்மை யுணர்ந்து,
மருவின்றி வாழ முனைந்து நிற்போம்!
மாறா நிதியமாய் அறிவைச் செய்தால்,
மனமே என்றும் ஆளுமை செய்யும்!
மாறிடும் உலகியல் துன்பம் தராது!
மனத்தை வென்று உலகியல் அறிவோம்!

**கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்** 03-04-2022 (11.00 AM)

